**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.40/2021- DW-1**

| | |
|---|---|
| Name | திரு.முனுசாமி |
| Father Name | திரு.லேட்.சின்னக்கண்ணு |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **02.02.2026.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

என் தந்தை சின்னக்கண்ணு 01.01.1995–ம் தேதி இறந்தார். சுப்பிரமணியன் 2018–ம் ஆண்டு இறந்தார். நானும், என் சகோதர்களும் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக நான் சொல்லியிருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் பெயரிலும், என் சகோதரர்கள் பெயரிலும் தனித்தனி பட்டா இல்லை. கூட்டுப்பட்டாவாக உள்ளது. வழக்கு சொத்தை நான் அனுபவம் செய்ததை காண்பிக்க வரி ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும், என் சகோதர்களுக்கும் இடையில் பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நானும், 2 முதல் 8 பிரதிவாதிகளும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் வழக்கு E மற்றும் F சொத்துகள் பொன்னம்மாள் மற்றும் கிருஷ்ணன் பெயர்களில் உள்ளதை ஒப்புக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. E அட்டவணை சொத்தை பொன்னம்மாள் பெயரில் 1968–ல் கிரையம் வாங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். மாரிமுத்துவும், அவரது அம்மாவும் மாரிமுத்துவின் அப்பா கிருஷ்ணன் இறப்பிற்கு பிறகு எங்களோடு கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள். விவசாய வருமானத்தில் மாரிமுத்துவிற்கும், அவரது குடும்பத்தினருக்கும் நான் பங்கு கொடுக்கவில்லை. நான் அடமானத்தை மீட்டேன் என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்துகளில் வரும் வருமானத்தை நான் அனுபவித்துக் கொண்டு வாதி தரப்பினருக்கு வேண்டுமென்றே பங்கு கொடுக்க மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. மாரிமுத்து அனுபவிக்கும் 10 ஏக்கர் சொத்தில் நான் பிரச்சனை செய்ததற்காக காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சொத்து பிரச்சனையை நீதிமன்றத்தில் தீர்த்துக்கொள்வதாக நான் காவல் நிலையத்தில் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2012–ம் ஆண்டில் தனவேல் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு எங்கள் தரப்பில் எந்த ஆவணமும் இருப்பதாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துகளுக்கான மூல ஆவணங்கள் என் வசம் இல்லை. வழக்கு சொத்துகள் சம்மந்தமாக என்னிடம்

ஆவணங்கள் எதுவும் இல்லாமல் எந்த விவரமும் தெரியாமலும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை செய்யாமல் சுப்பிரமணியன் 2012-ம் ஆண்டு ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பிறகு என் மனைவியின் பெயரில் ஏற்படுத்திய கிரைய ஆவணங்கள் செல்லாது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.